2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 333 /2025

2026 வது ஆண்டு மார்ச் மாதம் 25–ம் நாள் பி.வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (2069 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. செல்வி லீலாபாய் | வட்டம் | பாளையங்கோட்டை |
| க.பெ /த.பெ | திரு. துரை சிங் அகஸ்டஸ் | கிராமம் | கே.டி.சி. நகர் |
| வயது | 57 | | |

<u>25.03.2026 முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் 2 ஆம் பிரதிவாதி ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

<u>4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வழக்கின் வாதி எனது உடன் பிறந்த சகோதரி. உயில் ஆவணத்தை தவிர வேறு ஆவணங்களில் வாதியின் பெயர் லதாபாய் என்று உள்ளது என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் நானும் பயனாளி என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் பயனாளி என்பதாலும் வாதி எனக்கு உடன்பிறந்த சகோதரி என்பதாலும் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என்னிடம் காணப்படும் உயில் ஆவணம் வா.சா.ஆ.3 எனது அப்பா எழுதி வைத்து உயில் என்றால் சரிதான். எனது அப்பாவின் கையெழுத்து எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். உயிலிலுள்ள கையெழுத்து எனது அப்பாவின் கையெழுத்து தான். சாட்சி கையெழுத்திட்டவர் எங்கே இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. எனது சகோதரியின் பெயர் லதாபாய் என்றால்

சரிதான். உயில் ஆவணத்தில் வாதியின் பெயர் செல்வின் லதாபாய் என்று எங்களது குடும்ப பெயருடன் சேர்த்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 உயிலிலுள்ள செல்வின் லதாபாயும் வாதியும் ஒரே நபர் தான் என்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.03.25 18:35:39 +0530